**வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடைகள் வியாபார கம்பனியின் கொடுக்கல் வாங்கல் அறிக்கை - 2024/2025**

---

வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடைகள் வியாபார கம்பினியின் 2024 மற்றும் 2025 மார்ச் 31 திகதி முடிவடைந்த ஆண்டுகளுக்காக செயற்பாட்டு அலுவல்கள் மீது இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பு 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பு 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதுகின்ற கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

கம்பனியின் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையுடன் சமர்பிக்கப்பட்டிருந்த செயற்பாட்டுக் கைநூலின் பந்தி இலக்கம் 6.6 இன் படி கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2021/2022, 2022/2023, 2023/2024 மற்றும் 2024/2025 ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கைகள் 2025 செப்தம்பர் 30 திகதி அளவிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | தற்போது 2020/2021 ஆண்டிற்கான கணக்காய்வு பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன், 2021/2022 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு ஒப்படைப்பதற்கு தயாரிக்கப்பட்டு வருவதுடன், கூடிய விரைவில் அடுத்த ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுகள் கணக்காய்விற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சுற்றறிக்கையின் படி விதிக்கப்பட்ட நாட்களில் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், வருமானங்கள் மற்றும் செலவுகளின் உளமை

கம்பனியினால் இறுதியாக தயாரிக்கப்பட்டிருந்த 2019/2020, 2020/2021 ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகள் மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடயம் | 2019/2020 பெறுமதி (ரூபா) | 2020/2021 பெறுமதி (ரூபா) |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 21,480,763 | 18,036,614 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 111,072,882 | 119,468,978 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **132,553,645** | **137,505,592** |
| உரிமை | (28,305,403) | (24,707,845) |
| **பொறுப்புக்கள்** | | |
| நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் | 17,443,717 | 17,603,728 |
| நடைமுறைச் பொறுப்புக்கள் | 143,415,331 | 144,609,709 |
| **உரிமை மற்றும் மொத்தப் பொறுப்புகள்** | **132,553,645** | **137,505,592** |
| மொத்த வருமானம் | 130,125,819 | 147,082,434 |
| மொத்த செலவுகள் | 159,303,425 | 143,599,016 |
| **இலாபம் / நட்டம்** | **(29,177,606)** | **3,483,418** |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொது முயற்சிகளின் தாபனம் சார் கட்டுப்பாட்டுக்கான வழிகாட்டல் பந்தி 2.2.2(a)(ii) | பணிப்பாளர் சபையினால் மாதத்திற்கு ஒரு தடவை வீதம் ஆண்டின் போது 12 பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடாத்தப்பட்டு கம்பனியில் செயலாற்றுகை தொடர்பாக வழிகாட்டல் ஒன்று மற்றும் கருமங்களின் மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 ஆண்டு முதல் 2025 மார்ச் 31 திகதி வரை பணிபபாளர் சபை நியமனம் செய்யப்பட்டிருக்காமையால், 2024-2025 மார்ச் 31 திகதி முடிவடைந்த ஆண்டுகளுக்கான பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் ஏதும் நடாத்தியிருக்கவில்லை. | 2019 ஆண்டு 2025 ஜுலை மாதம் வரை பணிப்பாளர் சபையொன்று நியமனம் செய்யப்படாமையால் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை. புதிய பணிப்பாளர் சபையொன்று நியமனம் செய்யப்பட்டு 2025.07.31 திகதி முதலாவது கூட்டம் நடாத்தப்பட்டதுடன், தற்போது மாதாந்த பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் விதிக்கப்பட்டுள்ளவாறு நடாத்தப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக கூட்டங்கள் நடாத்தி ஆக்கபூர்வமான தீர்மானங்கள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) அரச பெறுகை வழிகாட்டல் கோவை | | | |
| (i) வழிகாட்டல் 4.2.1 | கம்பனியினால் குறைந்தளவு மூன்று வருட காலத்திற்காக எதிர்பார்ப்பு பெறுகை அலுவல்கள் உட்படுத்தி பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2022 - 2025 ஆண்டுக்காக அவ்வாறான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 மற்றும் 2024 ஆண்டுகளுக்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டு தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைத் தலைவரின் அங்கீகாரத்துடன் விவசாய அமைச்சுக்கு அனுப்பப்பட்டது. 2025 ஆண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்ட போதிலும், பணிப்பாளர் சபையொன்று நியமனம் செய்திருக்காமையால் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்க முடியாமல் போனது. | குறைந்த அளவு மூன்று வருட காலத்திற்காக எதிர்பார்த்த பெறுகை அலுவல்கள் அடங்கிய பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) வழிகாட்டல் 4.2.2 (ஆ) | பெறுகை நேரசூசியொன்று தயாரிக்கப்பட்டு முறையான முகாமைத்துவமொன்று மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான பெறுகை நேரசூசியொன்று 2022-2025 ஆண்டுகளுக்காக தயாரித்திருக்கவில்லை. | 2023 மற்றும் 2024 ஆண்டுகளுக்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டு தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைத் தலைவரின் அங்கீகாரத்துடன் விவசாய அமைச்சுக்கு அனுப்பப்பட்டது. 2025 ஆண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்ட போதிலும், பணிப்பாளர் சபையொன்று நியமனம் செய்திருக்காமையால் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்க முடியாமல் போனது. | பெறுகை நேரசூசிகள் தயாரிக்கப்பட்டு முறையான முகாமைத்துவமொன்று மேற்கொள்ளப்பட்டு எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக செயற்படுத்த வேண்டும். |
| (இ) 2009 செப்தம்பர் 01 திகதிய DMA/2009(2) இலக்கம் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களச் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்களை ஆவணப்படுத்துவதற்காக முறைப் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் சென்றிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று எதிர் காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | முறைப் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஜுலை 16 திகதிய அமப/15/0940/631/018-I இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி கம்பனியின் செயற்பாட்டுத் செயற்திறன்களை உறுதிப்படுத்துவதற்காக அனைத்து வளங்கள், சொத்துக்கள், பங்குகள் மற்றும் முகாமைத்துவம் தேசிய பண்ணை விலங்கு அதிகாரசபையின் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையினால் கம்பனியின் பங்கு உரிமையில் 27 சதவீதம் மாத்திரமே பெற்றுந்ததுடன், கணக்காய்வு திகதியாகிய 2025 செப்தம்பர் 30 திகதி அளவிலும் தனதாக்கிக் கொள்ளும் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆண்டு முதல் இதுவரை உரித்தாக்கும் செய்முறை முறைப்பிரகாரம் மேற்கொள்வது தொடர்பாக அனேக வேண்டுதல்கள் மேற்கொள்ளப்பட்டது. எனினும், 2024 ஆண்டின் அரைப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட புதிய அரசாங்கம் எமது கம்பனியினை நிர்வகிக்கும் தேசிய பண்ணை விலங்கு அதிகாரசபை போலவே, மகாவலி அதிகாரசபையும் ஒரே அமைச்சின் கீழ் நிருவகிக்கப்படுவதனால் தற்போது நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர் சபை அந்த நிறுவனங்கள் இடையே முறையே உத்தியோகத்தர்கள் இருவர் மற்றும் மூவர் நியமனம் செய்யப்பட்டது. கம்பனியின் பங்குகளை உரித்தாக்கல் எதிர் காலத்தில் அமைச்சின் உயர் முகாமைத்துவ தீர்மானத்தின் படி மேற்கொள்ளப்படும். | அமைச்சரவை தீர்மானத்தின் படி கம்பனியை ஒழித்தல் மற்றும் உரித்தாக்கல் அலுவல்கள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | கலங்குட்டிய பண்ணைக் காணி 2010 ஆண்டிலிருந்த 2018 வரை 09 வருடங்களுக்காக மிகை அறவீடு உட்பட ரூபா 10,485,000 இற்காக குத்தகை தொகை இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு செலுத்தியிருக்காமையால் குத்தகை உரிமையை இரத்துச் செய்வதாக RPM/T/L/CLO/கல்/74 இலக்கம் கொண்ட மற்றும் 2017 ஒக்தோபர் 10 திகதிய கடிதத்தின் மூலம் மகாவலி அதிகாரசபையின் வதிவிட திட்ட முகாமையாளர் (எச் வலையத்தினால்) அறிவித்திருந்த போதிலும், 2025 செப்தம்பர் 08 திகதி அளவிலும் இந்த குத்தகையை செலுத்தியிருக்கவில்லை. மேலும், அந்த குத்தகை ஆதனத்திற்கான உடன்படிக்கையும் கணக்காய்வுத் திகதியாகிய 2025 செப்தம்பர் 30 திகதி வரை | மிகவும் குறைந்த நிதி மட்டமொன்று காணப்பட்ட காரணத்தினால் அந்த குத்தகைத் தொகையை செலுத்துவதற்கு முடியாமல் இருந்தது. இலங்கை மகாவலி அதிகாரசபை பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் பிரதித் தலைவர் அமைச்சு அதிகாரிகள் மற்றும் மகாவலி கால்நடைகள் வியாபார கம்பனி முகாமைத்துவமிடையே நடைபெற்ற கலந்துரையாடலில் மகாவலி அதிகாரசபைக்குரிய பண்ணைகளுக்கு கம்பனியினால் கடனடிப்படையில் பெற்றுக்கொண்ட கோழிக் குஞ்சுகளுக்காக அறவிடப்பட | நிலுவை குத்தகைத் தொகையை இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு செலுத்துவதற்கும் உடன்படிக்கையொன்று மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | வேண்டிய ரூபா 12,057,503 தொகை குத்தகைத் தொகைக்காக பதிவழித்து கலங்குட்டிய பண்ணையின் 25 ஏக்கர் நிலப் பரப்பொன்று கம்பனிக்கு உரித்தாக்குவதற்கு தீர்மானமொன்று எடுத்திருந்த போதிலும், அதனை செயற்படுத்துதல் தாமதமட்டத்தில் காணப்பட்டது. | |
| (இ) | மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான 26 ஏக்கர்களைக் கொண்ட கம்பனியின் அலுவலகம் அமைந்துள்ள பண்ணைக் காணிக்குரிய முப்பது வருட குத்தகை உடன்படிக்கை கால வரையறை 2019 ஆண்டு ஒக்தோபர் 02 திகதி முடிவடைந்திருந்த போதிலும், காணிக்குரிய உடன்படிக்கையை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் கம்பனி பண்ணையை நடாத்திச் செல்லும் மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமான நிராவிய 02 ஏக்கர் நிலப் பகுதி தொடர்பாகவும் குத்தகை உடன்படிக்கையொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகை காலத்தை மீண்டும் புதுப்பித்துக்கொள்வதற்காக தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையூடாக அனேக வேண்டுகோள் கடிதங்கள் மகாவலி அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ‘‘எச்’’ வலையத்தின் வதிவிட திட்ட முகாமையாளருடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் தொடர்பான கோப்புக்கள் தபுத்தேகம மகாவலி ‘‘எச்’’ வலைய அலுவலகத்தில் காணப்படவில்லை என கூறப்பட்டது. | குத்தகை காலம் முடிவடைந்துள்ள காணி தொடர்பாக குத்தகை உடன்படிக்கை ஒன்றிற்கு அணுகுவதற்கு அல்லது உடன்படிக்கையை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2012 நவம்பர் 29 திகதி முதல் 2013 ஒக்தோபர் 29 திகதியான காலப் பகுதியினுள் தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து கம்பனியின் பண்ணைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 19,353,842 இற்கான கால்நடை உணவுக்காக வழங்கியிருந்த காசோலை மதிப்பளிக்கப்படாமையால் குறிப்பிட்ட நிறுவனத்தினால் வழங்கிய நிறுவத்தினால் கம்பனிக்கு எதிராக அனுராதபுர நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் 30118M மற்றும் 30126M கொண்ட 02 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. 2025 மார்ச் 05 திகதி 30118M வழக்கில் கம்பனி தோல்வியடைந்திருந்துடன், பின்னர் கம்பனியினால் அனுராதபுர உயர் நீதிமன்றத்தில் திருத்த வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மேலும் 30126M இலக்கம் கொண்ட வழக்கிலிருந்து கம்பனி குற்றத்திலிருந்து தவிர்ப்பளிக்கப்பட்டிருந்த போதிலும், | காசோலை மதிப்பளிக்கப்படாமை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கிற்காக ரூபா 19,353,842 இற்கான நிலுவைத் தொகை எதிர் காலத்தில் கம்பனிக்கு செலுத்தி வழக்கை உடன்பாடொன்று ஏற்படுத்தியிருந்தது. சட்ட வரைஞர் கட்டணத்திற்காக பாரிய தொகையொன்று இதுவரை செலுத்தியிருந்தமையால் தொடர்ந்தும் சட்டவரைஞர்களுக்காக பணம் செலுத்துதல் காலத்தை மற்றும் பணத்தை வீணாக்குதல் பலனற்றதாக காணப்படுவதனால் வழக்கினை உடன்பாடொன்றுக்கு ஏற்படுத்தல் பொருத்தம் என NLDB தலைவர் உட்பட இறுதியாக நியமனம் செய்யப்பட்ட பணிப்பாளர் சபையின் அறிவுரையின் படி | பண்ணையினால் வழங்கப்பட்ட கால்நடை உணவு உட்பட பண்டங்களுக்கான அவற்றின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திய பின்னர் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிட்ட வழங்கும் நிறுவனத்தினால் மீண்டும் கம்பனிக்கு எதிராக திருத்திய வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு அலுவல்களுக்காக 2018 ஜனவரி 05 திகதி முதல் 2025 ஜூலை 09 திகதி வரை ரூபா 1,244,680 இற்கான சட்டச் செலவுகள் கம்பனியினால் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2025 ஒக்தோபர் 31 திகதி அளவில் கம்பனியினால் குறிப்பிட்ட வழங்கும் நிறுவனத்துடன் கலந்துரையாடி செலுத்த வேண்டிய பணத்தை தவணைகளாக செலுத்துவதற்கு இரு தரப்பினரும் உடன்பாடொன்றுக்கு வந்திருந்தது. | தனியார் நிறுவத்ததுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போது செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையுடன் தனியார் நிறுவனத்தினால் செலவிடப்பட்டிருந்த ரூபா 3,000,000 இற்காக சட்டவரைஞர் கட்டணத்துடன், ரூபா 22,353,842 தொகை மாதாந்தம ரூபா 2,500,000 தொகை வீதம் செலுத்துவதற்கும் அதன் முதலாவது தவணையான 25 இலட்சம் 2025 செப்தம்பர் 26 திகதி காசோலையொன்றின் மூலம் செலுத்துவதற்கும் மீதியான 08 தவணைகள் முறையே 2025 ஒக்தோபர் மாதத்தில் இருந்து 2026 ஏப்ரல் மாதம் வரை ரூபா 25 இலட்சம் வீதம் செலுத்தி 2026 மே மாதம் இறுதித் தவணையான ரூபா 2,353,842 தொகை செலுத்துவதற்கு இணங்கியிருந்தது. இரு தரப்பினர்களினாலும் தற்போது உடன்பாடொன்றுக்கு கலந்துரையாடப்பட்டிருப்பதனால் முதலாவது தவணையாகிய ரூபா 2,500,000 காசோலையொன்றின் மூலம் 2025 செப்தம்பர் 26 திகதி செலுத்தப்பட்டது. | |
| (உ) | கம்பனியின் பேரேட்டுக் கணக்கின் படி இலக்கம் 70168, 80168, 10168 மற்றும் 40/2023 இலக்கம் கொண்ட வழக்கு அலுவல்களுக்காக 2023 நவம்பர் 11 திகதி முதல் 2025 செப்தம்பர் 25 திகதி வரையான காலப் பகுதியில் சட்டவரைஞர் கட்டணம் உட்பட ஏனைய செலவுகளுக்காக ரூபா 2,786,330 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததற்காக காரணங்கள், உரிய வழக்குத் தீர்ப்புக்கள் மற்றும் செலுத்த வேண்டிய நட்டஈட்டுத் தொகை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | உயிரியல் பாதுகாப்பு செயல்முறைக்கு இணங்க நிர்மாணிக்கப்பட்ட நுழைவுப்பாதை வெளித் தரப்பினரினால் வெளிப் பாவனைக்காக பயன்படுத்தப்படல் தொடர்பாக சச்சரவு ஏற்பட்டிருந்தமையால் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பாக கெக்கிராவ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கின் வழக்கு இலக்கம் 80168 வழக்கில் அது பொதுப்பாதை ஒன்றென தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. இந்தப் பண்ணை இனவிருத்திப் பண்ணையொன்றாக | கம்பனியின் சட்டச் செலவுகளை குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | காணப்படுவதனால் இந்தப் பாதையை பொதுவாகப் பாவிக்க முடியாது என மீண்டும் 80168 வழக்குத் தீர்ப்புக்கு எதிராக அனுராதபுரம் உயர் நீதிமன்றத்தில் 40/2024 இலக்கம் கொண்ட திருத்தி வழக்கொண்டு தாக்கல் செய்யப்பட்டது. அங்கு திருத்தத்தை ஏற்க மறுத்து இதுவொரு பொதுப் பாதை என தீர்ப்பு வழங்கப்பட்டது. இங்கு நட்டஈடு செலுத்த தேவைப்படவில்லை. சட்ட வரைஞர் கட்டணம் மற்றும் திருத்தல் கட்டணம் செலுத்தப்பட்டது. | |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் 2024 ஆண்டின் உற்பத்தித் திட்டத்தின் படி கோழிக் குஞ்சுகள் உற்பத்தி, கோழி இறைச்சி உற்பத்தி, பன்றி உற்பத்தி, தேங்காய் உற்பத்தி ஆகிய 04 கருமங்களின் இலக்குகளை நெருங்குதில் கோழி இறைச்சி உற்பத்தி 38 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. கோழிக் குஞ்சு உற்பத்தியில் மாத்திரம் எதிர்பார்த்த இலக்குகளை நெருங்கியிருந்ததுடன், தேங்காய் உற்பத்தி மற்றும் பன்றி உற்பத்தி முறையே 85 சதவீதம் மற்றும் 90 சதவீதமாக காணபட்டது. | இந்தக் கம்பனியில் பிரதான வருமான வழியாவது ஒருநாள் குஞ்சுகளை விற்பனை செய்தல் ஆகும். 2024 ஆண்டில் சந்தையில் ஒருநாள் வயதையுடைய பொயிலர் குஞ்சுகளுக்கான விலை கூடிய பெறுமதியொன்றாக காணப்பட்டமையால் பொயிலர் இறைச்சிக்காக வளர்ப்பதை விட குஞ்சுகள் விற்பனை செய்தல் கம்பனிக்கு இலாபகரத்தன்மையாக இருந்தது. அதேபோல், அந்த ஆண்டு விற்பனை மேற்கொள்ளப்பட்ட இந்த வலையத்தின் பொயிலர் இறைச்சக்கான கேள்வியும் குறைந்திருந்தது. அதன் காரணமாக எதிர்பார்த்த இறைச்சி உற்பத்தி எமது கம்பனியினால் மேற்கொள்ளப்படவில்லை. | கம்பனியின் எதிர்பார்த்த இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 நிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியினால் இலங்கை வங்கியில் பேணிச் செல்லப்படுகின்ற நடைமுறைக் கணக்கில் 2020 ஆண்டு முதல் 2025 ஆண்டு வரை தொடர்ச்சியாக மேலதிக | எமது கம்பனிக்கு தேவையான பணம் அரச திறைசேயியில் இருந்தோ அல்லது வேறு வழிகளின் மூலம் | வங்கி மேலதிகபற்றினை குறைத்து, வட்டிச் செலவினை குறைத்து சிறந்த நிதி |

| | | | |
|---|---|---|---|
| | பற்று மீதியொன்று காணப்பட்டதுடன், 2025 மார்ச் 31 திகதி அளவில் அது ரூபா 19,026,259 இற்கான மீதியொன்றாக காணப்பட்டது. குறிப்பிட்ட காலப் பகுதியில் வங்கி மேலதிகப்பற்று வட்டி செலவு என கூட்டுத்தொகை ரூபா 4,930,610 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கிடைக்கப்படாததுடன், எமது கம்பனிக்கு தேவையான அனைத்துப் பணத் தேவைகளும் கம்பனியினால் உழைக்கப்படுவதுடன், வருமானம் குறைவடைந்து பணம் தேவைப்பட்ட போது அந்த எமது பணத் தேவையை பூர்த்தி செய்வது, வங்கி மேலதிகப்பற்று வசதிகள் மூலமாகும். ஆந்த அந்தப் பணம் இலங்கை வங்கியில் பேணிச் செல்லப்படுகின்ற நிலையான வைப்பை பிணையாக வைத்து வங்கி மேலதிகப்பற்று பெற்றுக்கொள்ளப்படுகின்றன. | நிலைமையொன்றினை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கம்பனியினால் மக்கள் வங்கியில் பேணிச் செல்லப்படுகின்ற வங்கி நடைமுறைக் கணக்கு நீண்ட காலம் முதல் வியாபார அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன், 2024 மார்ச் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 49,389 இற்கான மீதியொன்று காணப்பட்டது. | எமது கம்பனியின் தலைமை அலுவலகம் 2015 ஆண்டு வரை தெமட்ட கொடையில் அமைந்திருந்ததுடன், அக் காலத்தில் எமது கம்பனியினால் தெமடகொட மக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கொன்று காணப்பட்டதுடன், அந்த கணக்கு தொடர்பாக உரிய தகவல்களை வேண்டி கடிதமொன்று அந்த வங்கிக்கு அனுப்பப்பட்டது. அந்த வங்கியினால் இதுவரை எதுவித பதிலும் அனுப்பியிருக்கவில்லை. | முறையான அங்கீகாரத்தின் கீழ் வங்கிக் கணக்குகளை செயற்படு நிலைக்கு ஆக்குதல் அல்லது வியாபார அலுவல்களுக்காக தேவைப்படாவிடின் பணத்தினை பெற்று கணக்கினை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கம்பனியின் பேரேட்டுக் கணக்கின் படி படி 2025 மார்ச் 31 திகதியில் உள்ளவாறு 03 மாதங்களை மிகைத்துள்ள கடன்பட்டோர் பெறுமதி ரூபா 2,372,539 தொகை காணப்பட்டதுடன், அந்தக் கடன்பட்டோர் மீதி தொடர்பாக முறையான காலப் பகுப்பாய்வொன்று சமர்ப்பித்திருக்காமையால், நீண்ட கால கடன்பட்டோர் பெறுமதியை அறுதியாக இனங்காண முடியாதுள்ளது. | கம்பனியில் பல வருட காலம் முதல் கடன்பட்டோர் மீதிகள் காணப்படுகின்ற போதிலும் அவை தொடர்பாக போதியளவு தகவல்கள் நிறுவனத்தில் காணப்படவில்லை. அதனால் அந்த மீதிகளை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அதன் மூலம் கிடைக்கும் தீர்ப்பின் படி நடவடிக்கை எடுப்பேன். தற்காலத்தில் கடன் விற்பனை மேற்கொள்ளப்படவில்லை. | கடன்பட்டோர் மீதிகள் தொடர்பாக முறையான காலப் பகுப்பாய்வொன்று மேற்கொண்டு மீதித் தொகைகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 வாகனக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியினால் வேன் வண்டிகள், கப் வண்டிகள், லொறி வண்டிகள் மற்றும் டிரக்டர் வண்டிகள் உட்பட 09 வாகனங்கள் | தற்போது வாகனப் பாராமரிப்பு பதிவேடொன்று பேணப்பட்டு வருகின்றது. | வாகன திருத்த வேலைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு |

| | | |
|---|---|---|
| பயன்படுத்தப்படுகின்றதுடன், 2024 மற்றும் 2025 ஆண்டுகளுக்காக அந்த வாகனங்களுக்காக மேற்கொள்ள திருத்த வேலைகளுக்கான செலவுகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 மற்றும் 2025 ஆண்டுகளின் போது கம்பனியில் சேவையாற்றும் ஊழியர் எண்ணிக்கை முறையே 64 மற்றும் 69 ஆக காணப்பட்டது. கம்பனிக்கு தேவையான பதவியணியினர் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திலிருந்து அங்கீகார் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | எம்மால் சுட்டிக்காட்டப்பட்டது அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை எனவும், நிரந்தர எண்ணிக்கை 23 உத்தியோகத்தர்களாகும். எனினும், ஊழியர் 41, 46 ஆக காணப்படுவது பண்ணையின் தொழிலாளர்களாகும். | கம்பனிக்குத் தேவையான பதவியணியினர் தொடர்பாக முகாமைத்துவ சேவைத்த திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையுடன் சமர்பிக்கப்பட்டிருந்த நிறுவனம்சார் கட்டுப்பாட்டிற்கான வழிகாட்டலின் பிரிவு 4.2(h) பிரகாரம் ஒவ்வொரு 03 மாதங்களுக்கும் ஒருமுறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும் எனவும், அதில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சபையினால் 2024 மற்றும் 2025 ஆண்டுகளுக்கான குழுக் கூட்டங்கள் நடாத்தியிருக்கவில்லை. | எதிர் காலத்தில் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நல்லாளுகைக்கான வழிகாட்டல் கைநூலின் பிரிவு 4.2(h) பிரகாரம் ஒவ்வொரு 03 மாதங்களுக்கு ஒருமுறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையுடன் சமர்பிக்கப்பட்டிருந்த நிறுவனம்சார் | 2025 ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு மற்றும் மூலோபாய திட்டம் | சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் |

| | | |
|---|---|---|
| கட்டுப்பாட்டிற்கான வழிகாட்டலின் பிரிவு 2.3 பிரகாரம் கணக்காண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தின் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரதியொன்று பணிப்பாளர் சபையினால் அங்கீகரித்த பின்னர் வரிசையமைச்சு, அரச தொழில் முயற்சிகள் திணைக்களம், திறைச்சேரி மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2022 ஆண்டு முதல் 2025 ஆண்டு வரையான காலம் அடங்கக்கூடியவாறு கூட்டிணைந்த திட்டமொன்று மற்றும் 2024 மற்றும் 2025 ஆண்டுளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், பணிப்பாளர் சபையொன்று காணப்படாமையால் அதனை அங்கீகரித்துக்கொள்ள முடியவில்லை. | கணக்காண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4.3 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 2030 ஆண்டளவில் தனது அமைப்பின் கீழ் காணப்படும் அனைத்து நாடுகளினதும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு வழங்குவதை அடிப்படையாக கொண்டு நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் அறிமுகப்படுத்தியிருந்த போதிலும், கம்பனியினால் அதற்கு பொருந்தக்கூடியவாறு முறைப் பிரகாரம் தயாரிக்கப்பட்ட எதிர்பார்த்தப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் மற்றும் சுட்டிகள் இனங்கண்டிருக்கவில்லை. | இது தொடர்பாக எதிர் காலத்தில் வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு பொருந்தக்கூடியவாற எதிர்பார்த்த குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் சுட்டிகள் இனங்காண வேண்டும். |

## 4.4 வருடாந்த அறிக்கைகள் சபையில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையுடன் சமர்பிக்கப்பட்டிருந்த நிறுவனம்சார் கட்டுப்பாட்டிற்கான வழிகாட்டலின் பிரிவு 6.6 பிரகாரம் கணக்காண்டு முடிவடைநது 05 மாதங்களுக்குள் வருடாந்த அறிக்கை | பணிப்பாளர் சபையின் அறிவுரையின் படி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனியினால் 2019, 2020, 2021, 2022, 2023 மற்றும் 2024 ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் 2025 செம்தம்பர் 30 திகதி அளவிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.